# KANCHIPURAM DT

A **முதல் இடைப்பருவப் பொதுத் தேர்வு - 2023**

**பதினொன்றாம் வகுப்பு**

பதிவு எண்: | | | | | | |

நேரம்: 1.30 மணி **கணக்குப்பதிவியல்** மதிப்பெண்கள்: 50

## பகுதி - I

சரியான விடையைத் தேர்வு செய்யவும்: **10×1=10**

1. பின்வருவனவற்றில் எது கணக்கியலின் பிரிவுகளில் இடம் பெறாது.
   அ) நிதிநிலைக் கணக்கில் ஆ) மேலாண்மைக் கணக்கியல்
   இ) மனிதவளக் கணக்கியல் ஈ) மேற்கண்ட ஏதுமில்லை
2. GAAP என்பது
   அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள்
   ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
   இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்
   ஈ) இவற்றுள் ஏதுமில்லை
3. இந்தியாவில், கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
   அ) இந்திய மைய வங்கி ஆ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
   இ) உச்சநீதிமன்றம் ஈ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்
4. கணக்கியல் சமன்பாட்டின்படி சரியாக இல்லாதது
   அ) சொத்துக்கள் = பொறுப்புகள் + முதல்
   ஆ) சொத்துக்கள் = முதல் + பொறுப்புகள்
   இ) பொறுப்புகள் = சொத்துக்கள் + முதல்
   ஈ) முதல் = சொத்துக்கள் - பொறுப்புகள்
5. உரிமையாளரால்,வணிகத்திலிருந்து எடுக்கப்பட்ட தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
   அ) எடுப்புகள் கணக்கு ஆ) ரொக்கக் கணக்கு
   இ) முதல் கணக்கு ஈ) கொள்முதல் கணக்கு
6. பற்று மற்றும் வரவு இனங்களை குறிப்பேட்டிலிருந்து பேரேட்டுக் கணக்குகளில் எடுத்து எழுதும் நடைமுறையை இவ்வாறு அழைக்கலாம்.
   அ) கூட்டுதல் ஆ) எடுத்தெழுதல்
   இ) குறிப்பேட்டில் பதிதல் ஈ) இருப்புக் கட்டுதல்
7. ஒரு கணக்கின் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்
   அ) வரவு இருப்பு ஆ) பற்று இருப்பு
   இ) இருப்பு இன்மை ஈ) பற்று மற்றும் வரவு இருப்பு
8. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்?
   அ) ஆள்சார் கணக்குகள் மட்டும் ஆ) சொத்து கணக்குகள் மட்டும்
   இ) பெயரளவு கணக்குகள் மட்டும் ஈ) அனைத்து கணக்குகளும்
9. கீழ்க்கண்ட கணக்குகளில் எந்த கணக்கின் இருப்பு இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் தோன்றும்?
   அ) பற்பல கடனீந்தோர் கணக்கு ஆ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு
   இ) எடுப்புகள் கணக்கு ஈ) முதல் கணக்கு
10. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது
    அ) ஆண்டு இறுதியில் ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில்
    இ) ஒரு பருவ காலம் முடிந்ததும் ஈ) இவை ஏதும் இல்லை

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - II

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் 17 கட்டாயம் விடையளிக்கவும். 5×2=10

11. கணக்கியலை வரையறு.
12. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.
13. பேரேடு என்றால் என்ன?
14. இருப்பாய்வு தயாரிக்கும் முறைகள் யாவை?
15. கணக்கியல் கருத்துக்கள் என்றால் என்ன?
16. குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்பதன் பொருள் என்ன?
17. பற்று இருப்பு என்றால் என்ன?

## பகுதி - III

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் 24 கட்டாயம் விடையளிக்கவும். 5×3=15

18. கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாக கூறுக.
19. கணக்கியல் தரநிலைகள் குறித்து சிறு குறிப்பு வரைக.
20. இரட்டைப்பதிவு கணக்கு முறையின் விதிகள் யாவை?
21. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளில் விடுபட்ட தகவல்களை நிரப்புக:

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | .................. க/கு ப<br>..................<br>(ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது) | | 20,000 | 20,000 |
| | .................. க/கு ப<br>.................. க/கு ப<br>நிஹா க/கு<br>(18,800 பெற்றுக்கொண்டு நிஹாவின் 19,000ற்கான க/கு தீர்க்கப்பட்டது. | | ..............<br>.............. | ........... |

22. இருப்பாய்வின் குறைபாடுகள் யாவை?
23. பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக.
அ) முதல் ஆ) ரொக்கம்
இ) கழிவு பெற்றது ஈ) கொள்முதல் உ) கொடுபட வேண்டிய கூலி
24. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக:

| *சொத்துகள்* | = | *முதல்* | + | *பொறுப்புகள்* |
|---|---|---|---|---|
| 1,00,000 | = | 80,000 | + | ? |
| 2,00,000 | = | ? | + | 40,000 |
| ? | = | 1,60,000 | + | 80,000 |

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கு விடையளி: 3×5=15

25. அ) குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

(அல்லது)

ஆ) குறிப்பேட்டில் பதிவு செய்யும் படிநிலைகளை விவரி.

26. அ) விடுபட்ட பகுதிகளை நிரப்புக:

| சொத்துகள் = | பொறுப்புகள் + | முதல் |
|---|---|---|
| a) 1,00,000 | 20,000 | ? |
| b) 75,000 | 25,000 | ? |
| c) ? | 80,000 | 70,000 |
| d) ? | 45,000 | 55,000 |
| e) 2,00,000 | ? | 1,25,000 |
| f) 50,000 | ? | 25,000 |

(அல்லது)

ஆ) பின்வரும் இருப்புகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| வங்கிக் கடன் | 2,00,000 | கொள்முதல் | 1,80,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 1,00,000 | விற்பனை | 3,00,000 |
| சரக்கிருப்பு | 70,000 | கடனாளிகள் | 4,00,000 |
| முதல் | 2,50,000 | வங்கி | 2,00,000 |

27. அ) பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் மனோகர் அவர்களின் குறிப்பேடுகளில் பதிவு செய்க.

| 2018 | | | |
|---|---|---|---|
| மார்ச் | 1 | மனோகர் வியாபாரம் தொடங்க கொண்டு வந்த முதல் | 60,000 |
| | 2 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 10,000 |
| | 3 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 25,000 |
| | 6 | கமலேசிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 15,000 |
| | 8 | ரொக்கத்திற்கு சரக்கு விற்பனை செய்தது | 28,000 |
| | 10 | ஹரிக்கு கடனுக்கு சரக்கு விற்பனை செய்தது | 10,000 |
| | 14 | கமலேசிற்கு செலுத்திய ரொக்கம் | 12,000 |
| | 18 | வாடகை செலுத்தியது | 5,000 |
| | 25 | ஹரியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 8,000 |
| | 28 | சொந்த பயன்பாட்டிற்கு ரொக்கம் எடுத்தது | 4,000 |

(அல்லது)

ஆ) பின்வரும்நடவடிக்கைகளிலிருந்து அறைகலன் கணக்கு தயாரிக்கவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2016 | ஜனவரி | 1 | கையில் உள்ள அறைகலன் | 2,000 |
| | | 1 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | 4,000 |
| | | 30 | அறைகலன் விற்றது | 400 |

-------

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## காஞ்சிபுரம் மாவட்டம்

# முதல் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2023

## 11 - ஆம் வகுப்பு கணக்குப்பதிவியல் - விடைக் குறிப்பு

| சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதல். 10 X 1 = 10 | | |
|---|---|---|
| 1 | ஈ | மேற்கண்ட ஏதுமில்லை |
| 2 | ஆ | பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள் |
| 3 | ஈ | இந்தியப் பட்டயக்கணக்காளர் நிறுவனம் |
| 4 | இ | பொறுப்புகள் = சொத்துக்கள் + முதல் |
| 5 | ஆ | ரொக்கக் கணக்கு |
| 6 | ஆ | எடுத்தெழுதுதல் |
| 7 | ஆ | பற்று இருப்பு |
| 8 | ஈ | அனைத்து கணக்குகளும் |
| 9 | இ | எடுப்புகள் கணக்கு |
| 10 | ஆ | ஒரு குறிப்பிட்ட நாளில் |

### பகுதி --- II

**எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 17 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $5 \times 2 = 10$

**11. கணக்கியலை வரையறு.**

- அமெரிக்க பொதுக்கணக்காளர் சான்று நிறுவனத்தின் கூற்றுபடி, “கணக்கியல் என்பது குறைந்தபட்சம் ஒரு பகுதியாவது நிதியியல் தன்மைகொண்ட மற்றும் பணத்தால் மதிப்பிடக்கூடிய நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகளை, முறையாக பதியும், வகைப்படுத்தும் சுருங்கக்கூறும் மற்றும் அதன் விளைவுகளை தெரிவிக்கும் ஒரு கலையாகும்”.

( அல்லது )

- அமெரிக்ககணக்கியல் கழகத்தின் கூற்றின்படி, “கணக்கியல் என்பது பொருளாதார தகவல்களைக் கண்டறிந்து, அளவிட்டு, தகவல் தெரிவிக்கக்கூடிய ஒரு செயல்பாடாகும். இதன்மூலம், தகவல்களைப் பயன்படுத்துவோர் தக்கதீர்வு காண்பதற்கும் மற்றும் முடிவெடுப்பதற்கும் வகை செய்கிறது”.

**12. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.**

- ஜே.ஆர். பேட்லிபாய் அவர்களின் கூற்றுப்படி, “கணக்கு ஏடுகள் பராமரிப்பு என்பது, வணிக நடவடிக்கைகளை ஏடுகளில் பதிவு செய்யும் ஒரு கலையாகும்”.

( அல்லது )

- ஆர்.என். கார்ட்டர் அவர்களின் கூற்றுப்படி, “கணக்கேடுகள் பராமரிப்பு என்பது , பணம் அல்லது பணத்தின் மதிப்பிலுள்ள அனைத்து வணிக நடவடிக்கைகளையும் கணக்கேடுகளில் சரியாக பதிவு செய்யும் கலை மற்றும் அறிவியல் ஆகும்.”

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

**13. பேரேடு என்றால் என்ன?**

- ❖ பேரேடு என்பது ஆள்சார், சொத்துகள், பொறுப்புகள், செலவுகள் மற்றும் வருமானம் ஆகிய கணக்குகளில் இடம் பெற்றுள்ள மற்றும் ஒரு குறிப்பிட்டகாலத்திற்குரிய தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்று திரட்டி அதன் இறுதி விளைவைக் காட்டக் கூடிய ஒரு தொகுப்பு அறிக்கையாகும்.

**14. இருப்பாய்வு தயாரிக்கும் முறைகள் யாவை?**

1) இருப்பு முறை
2) மொத்தத் தொகை முறை
3) மொத்தத் தொகை முறை மற்றும் இருப்பு முறை.

**15. கணக்கியல் கருத்துக்கள் என்றால் என்ன?**

- ❖ கணக்கியல் கருத்துகள் என்பது, கணக்கியல் அடிப்படை அனுமானங்கள் ஆகும்.
- ❖ மேலும் கணக்கியல் கருத்துகள் என்பது, பரந்த ஒருமித்த கருத்துகளின் விளைவாகும்.

**16. குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்பதன் பொருள் என்ன?**

- ❖ நடவடிக்கைகள் ஏற்பட்டவுடன் , அதன் பற்று மற்றும் வரவு தன்மைகளை பகுப்பாய்வு செய்யப்பட்டு குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுவதையே, குறிப்பேட்டில் பதிவு செய்தல் எனப்படுகின்றது.

**17. பற்று இருப்பு என்றால் என்ன?**

- ❖ வரவு பக்கத்தின் மொத்தத்தை விட, பற்று பக்கத்தின் மொத்தம் அதிகமாக இருப்பின் அந்த இருப்பு, பற்று இருப்பு எனப்படும்.

## <u>பகுதி - III</u>

<u>எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்</u>. $5 \times 3 = 15$

**18. கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாக கூறுக.**

1) <u>நிதி நிலைக் கணக்கியல்</u>
   - ❖ இது நிதியியல் நடவடிக்கைகளையும், நிகழ்வுகளையும் பதிவு செய்யக்கூடியது.
   - ❖ ஏற்கனவே நடந்து முடிந்த நடவடிக்கைகளை மற்றும் நிகழ்வுகளை கணக்கேடுகளில் பதிவு செய்து பராமரிப்பதே நிதிநிலை கணக்கியலாகும்.
2) <u>அடக்கவிலைக் கணக்கியல்</u>
   - ❖ பொருட்கள் அல்லது சேவைகளின் அடக்க விலையைக் கணக்கிடுவதற்கு செலவு விவரங்களை சேகரித்து, பதிவு செய்து, வகைப்படுத்தி, செலவினங்களை ஒதுக்கீடு செய்வது அடக்க விலை கணக்கியல் ஆகும்.
3) <u>மேலாண்மைக் கணக்கியல்</u>
   - ❖ கணக்கியல் தகவல்களை நிர்வாகத்திற்கு தருவதன் மூலம் முடிவு எடுப்பதற்கும், நிறுவனத்தின் அன்றாட செயல்பாடுகளுக்கும் துணை செய்வதே மேலாண்மைக் கணக்கியல் ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

4) **<u>சமூகப் பொறுப்பு கணக்கியல்</u>**

- இது வணிக நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் கணக்கியல் தகவல்களை சமூகத்தின் பார்வையில் வழங்குவதாகும்.

5) **<u>மனிதவளக் கணக்கியல்</u>**

- இது ஒரு நிறுவனம், அதன் மனித வளத்தில் செய்த முதலீடுகளை இனம் காணுதல், அளவிடுதல், மற்றும் அறிவித்தல் ஆகியவற்றைச் சார்ந்ததாகும்

**19. கணக்கியல் தரநிலைகள் குறித்து சிறு குறிப்பு வரைக.**

- கணக்கியலில் பின்பற்றப்பட வேண்டிய கட்டமைப்பையும், விதிகளையும் கணக்கியல் தரநிலைகள் தருவதால், வெவ்வேறு நிறுவனங்களின் நிதிநிலை அறிக்கைகளை ஒப்பீடு செய்ய முடிகிறது.
- நிதிநிலை அறிக்கை தயார் செய்வதில் , நிலைத்தன்மை, ஒப்பீட்டுதன்மை, நிறைவுத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கணக்கியல் கோட்பாடுகளை தர நிர்ணயம் செய்வது அவசியமாகிறது.
- கணக்கியல் தரநிலைகள் என்பது ,கணக்கியல் நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகளை அடையாளம் கண்டு, அளவிட்டு, பதிவு செய்து, தகவல்களை நிதி அறிக்கை வாயிலாக வெளிப்படுத்துவதற்காக, கணக்கியல் வல்லுநர் குழு அல்லது அரசு அல்லது பிற ஒழுங்காற்று அமைப்புகளால் வெளியிடப்படும் கொள்கை ஆவணங்களாகும்

**20. இரட்டைப்பதிவு கணக்கு முறையின் விதிகள் யாவை?**

1) **<u>ஆள்சார் கணக்கு</u>**

- 'பெறுபவரை பற்று செய் மற்றும் தருபவரை வரவு செய்.'
- ஆள்சார்கணக்கில் பலனைப் பெறும் நபரின் கணக்கை பற்று வைக்க வேண்டும் மற்றும் பலனைத் தரும் நபரின் கணக்கை வரவு வைக்க வேண்டும்.

2) **<u>சொத்து கணக்கு</u>**

- 'உள்வருவதை பற்று செய் மற்றும் வெளிச்செல்வதை வரவு செய்'.
- சொத்து கணக்கு என்றால் விதியின்படி உள் வருவதை பற்று செய்ய வேண்டும். வெளிச் செல்வதை வரவு செய்ய வேண்டும்.

3) **<u>பெயரளவு கணக்கு</u>**

- 'செலவுகளையும் நட்டங்களையும் பற்று செய் மற்றும் வருமானங்களையும் ஆதாயங்களையும் வரவு செய்'.
- பெயரளவு கணக்குகளின் விதிப்படி, செலவுகளையும், நட்டங்களையும் பற்று செய்யவேண்டும். வருமானங்களையும், ஆதாயங்களையும் வரவு செய்ய வேண்டும்.

21. **குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | கொள்முதல் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது ) | | 20,000 | 20,000 |
| | ரொக்க க/கு ப<br>அளித்த தள்ளுபடி க/கு ப<br>நிஹா க/கு<br>( 18,800 பெற்றுக்கொண்டு நிஹாவின் 19,000 ற்கான க/கு தீர்க்கப்பட்டது ) | | 18,800<br>200 | 19,000 |

22. **இருப்பாய்வின் குறைபாடுகள் யாவை?**

1. ஒரு நிறுவனம் இருப்பாய்வினைத் தயாரிக்க வேண்டுமானால், அந் நிறுவனத்தின் கணக்குகள் இரட்டைப்பதிவு முறையை அடிப்படையாகக் கோண்டு தயாரிக்கப் பட்டிருக்க வேண்டும்.
2. ஏதாவது நடவடிக்கைகள் கணக்கேடுகளில் விடுபட்டிருப்பினும் இருப்பாய்வு சமன்பட்டு விடும்.
3. கணக்கேடுகளில் ஏதேனும் பிழைகள் ஏற்பட்டிருந்தாலும் இருப்பாய்வு சமன்பட்டு விடும்.
4. இருப்பாய்வினை முறையாக தயாரிக்கவில்லை என்றால், அதனை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் இறுதிக்கணக்குகள், ஒரு நிறுவனத்தின் உண்மையான நிதி நிலையை உணர்த்தாது.
5. இருப்பாய்வு சமன்பட்டு விட்டால், அதுவே கணக்கேடுகளில் உள்ள பதிவுகளின் கணக்கீட்டு சரித்தன்மைக்கு இறுதிச் சான்றாக அமையாது. ஏனெனில், கணக்கேடுகளில் ஏற்படும் விடுபிழைகள், ஈடுசெய்யும் பிழைகள், மற்றும் விதிப்பிழைகள் போன்றவற்றை இருப்பாய்வு வெளிக்காட்டுவதில்லை

23.

| வ.எண் | விவரம் | வகைப்பாடு |
|---|---|---|
| அ | முதல் | ஆள்சார் கணக்கு |
| ஆ | ரொக்கம் | சொத்து கணக்கு |
| இ | கழிவு பெற்றது | பெயரளவு கணக்கு |
| ஈ | கொள்முதல் | பெயரளவு கணக்கு |
| உ | கொடுபடவேண்டிய கூலி | ஆள்சார் கணக்கு |



www.Padasalai.Net

24. **கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக**

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | ₹.1,00,000 | = | ₹.80,000 | + | ₹. 20,000 |
| (ஆ) | ₹.2,00,000 | = | ₹.1,60,000 | + | ₹. 40,000 |
| (இ) | ₹. 2,40,000 | = | ₹.1,60,000 | + | ₹. 80,000 |

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 × 5 = 15

25. அ) **குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.**

| அடிப்படை | குறிப்பேடு | பேரேடு |
|---|---|---|
| பதிவு செய்தல் | நடவடிக்கை நிகழ்ந்தவுடன் இதில் பதிவு செய்யப்படும் | குறிப்பேடு தயாரித்த அதே நாளில் அல்லது துணைஏடுகள் பராமரித்து வந்தால், ஒரு குறிப்பிட்டகாலத்தின் இறுதியில் அதாவது வாரத்தின் கடைசி நாள் அல்லது இரு வாரங்களுக்கு ஒருமுறை இதில்எடுத்தெழுதப்படும் |
| பதிவு செய்யும் நிலை | பதிவு செய்வது முதல் நிலையாகும் | குறிப்பேட்டில் பதிந்த பிறகு பேரேடு தயாரிப்பதால், இது இரண்டாவது நிலையாகும. |
| பதிவு செய்யும் வரிசை | நடவடிக்கைகள் நிகழ்ந்த வரிசைப்படி அதாவது நடவடிக்கைகள் நிகழ்ந்த நாளின் படி பதிவு செய்யப்படுகிறது | கணக்குகளின் வரிசைப்படி ,பதிவுகள் செய்யப்படுகின்றன. |
| வழிமுறை | ஏடுகளில் பதிவு செய்வதை, குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்கிறோம். | பேரேட்டில் பதிவு செய்வதை, எடுத்தெழுதுதல் என்கிறோம். |
| இருப்பாய்வு தயாரிக்க உதவுதல் | குறிப்பேட்டில் பதியப்பட்டுள்ள தொகைகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்க இயலாது | பேரேட்டுக் கணக்குகளின் மூலம் கிடைக்கப் பெற்ற இருப்புகளே இருப்பாய்வு தயாரிக்க அடிப்படையாகிறது. |
| பதிவிற்கான ஆதாரம் | ஆதாரஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பேட்டுப்பதிவுகள் செய்யப்படுகின்றன. | குறிப்பேட்டுப் பதிவுகளைக் கொண்டு பேரேடு தயாரிக்கப்படுகிறது. |
| நிகர நிலை | இதனைக் கொண்டு, ஒரு கணக்கின் நிகர நிலையினை அறிய முடியாது. | இதனைக் கொண்டு, ஒரு கணக்கின் நிகர நிலையினை அறியலாம். |

( **அல்லது** )

25. ஆ) குறிப்பேட்டில் பதிவு செய்யும் படி நிலைகளை விவரி.

குறிப்பேட்டில் பதிவு செய்வதற்கு பின்வரும் படிநிலைகள் பின்பற்றப்படுகின்றன:

i) நடவடிக்கைகளை ஆய்வு செய்து அதிலுள்ள கணக்குகளை (தன்மையின் அடிப்படையில்) அடையாளம் காண வேண்டும்.

ii) மேலே அடையாளம் கண்ட கணக்குகளை ஆள்சார் கணக்கு, சொத்துகணக்கு அல்லது பெயரளவு கணக்கு என்று பாகுபடுத்த வேண்டும்.

iii) மேலே பாகுபடுத்தப்பட்ட (ஒரு நடவடிக்கைக்கு தேவையான) இரண்டு கணக்குகளுக்கும் பற்று, வரவு விதிகளைப் பொருத்திப் பார்க்க வேண்டும்.

iv) இரட்டைப்பதிவு முறையின் விதிகளைப் பயன்படுத்தி எந்த கணக்கினைப் பற்று வைக்கவேண்டும், எந்த கணக்கினை வரவு வைக்க வேண்டும் என கண்டறிய வேண்டும்.

v) நடவடிக்கை நடந்த நாளினை, நாள் பத்தியில் பதிவு செய்திட வேண்டும்.

vi) பற்று வைக்க வேண்டிய கணக்கின் பெயரை விவரப்பத்தியின் இடது பக்கத்தில் மிகவும் நெருக்கமாக எழுத ஆரம்பித்து, அந்த வரியின் இறுதியில் 'ப' என்று பதிவு செய்ய வேண்டும்

* இதற்கு எதிரானஅதேவரியில் பற்றுப் பத்தியில் பற்று வைக்கும் தொகையினை பதிவு செய்திட வேண்டும்.

vii) வரவு வைக்க வேண்டிய கணக்கின் பெயரை இரண்டாவது வரியில் பக்க ஓரத்திலிருந்து சிறிது இடைவெளிவிட்டு, விவரப் பத்தியில் எழுத வேண்டும்.

* அதே வரியில் எதிராக உள்ள வரவுப்பத்தியில், வரவு வைக்கும் தொகையினை பதிவு செய்திட வேண்டும்.

viii) அடுத்த வரியில் விவரப்பத்தியில் சிறு விளக்கத்தினை பிறை அடைப்பில் கொடுக்க வேண்டும்

---

26. அ) விடுபட்ட பகுதிகளை நிரப்புக

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| a) | 1,00,000 | = | 20,000 | + | 80,000 |
| b) | 75,000 | = | 25,000 | + | 50,000 |
| c) | 1,50,000 | = | 80,000 | + | 70,000 |
| d) | 1,00,000 | = | 45,000 | + | 55,000 |
| e) | 2,00,000 | = | 75,000 | + | 1,25,000 |
| f) | 50,000 | = | 25,000 | + | 25,000 |

( அல்லது )



www.Padasalai.Net

26. ஆ)

## இருப்பாய்வு

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப. எண் | பற்று இருப்பு ₹. | வரவு இருப்பு ₹. |
|---|---|---|---|---|
| 1 | வங்கி கடன் | | | 2,00,000 |
| 2 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | | | 1,00,000 |
| 3 | சரக்கிருப்பு | | 70,000 | |
| 4 | முதல் | | | 2,50,000 |
| 5 | கொள்முதல் | | 1,80,000 | |
| 6 | விற்பனை | | | 3,00,000 |
| 7 | கடனாளிகள் | | 4,00,000 | |
| 8 | வங்கி | | 2,00,000 | |
| | மொத்தம் | | 8,50,000 | 8,50,000 |

27. அ)

### மனோகரின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018 மார் 1 | ரொக்க க/கு ப<br>மனோகர் முதல் க/கு<br>( மனோகர் ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 60,000 | 60,000 |
| 2 | அறைகலன் க / கு ப<br>ரொக்க க / கு<br>( ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ) | | 10,000 | 10,000 |
| 3 | கொள்முதல் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது) | | 25,000 | 25,000 |
| 6 | கொள்முதல் க/கு ப<br>கமலேஸ் க/கு<br>( கடனுக்கு கொள்முதல் செய்தது ) | | 15,000 | 15,000 |
| 8 | ரொக்க க/கு ப<br>விற்பனை க/கு<br>( ரொக்கத்திற்கு விற்பனை செய்தது ) | | 28,000 | 28,000 |
| 10 | ஹரி க/கு ப<br>விற்பனை க/கு<br>( கடனுக்கு விற்பனை செய்தது ) | | 10,000 | 10,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | கமலேஸ் க/கு ப<br>ரொக்க க/கு<br>( கமலேசுக்கு ரொக்கம் செலுத்தியது ) | | 12,000 | 12,000 |
| 18 | வாடகை க/கு ப<br>ரொக்க க/கு<br>( வாடகை செலுத்தியது ) | | 5,000 | 5,000 |
| 25 | ரொக்க க/கு ப<br>ஹரி க/கு<br>( ஹரியிடமிருந்து ரொக்கம் பெற்றது ) | | 8,000 | 8,000 |
| 28 | எடுப்புகள் க/கு ப<br>ரொக்க க/கு<br>( சொந்தப்பயனுக்கு ரொக்கம் எடுத்தது ) | | 4,000 | 4,000 |

( அல்லது )

27.ஆ)

ப **அறைகலன் கணக்கு** வ

| நாள் | விவரம் | கு. ப. எ | தொகை ₹ | நாள் | விவரம் | கு. ப.எ | தொகை ₹ |
|---|---|---|---|---|---|---|---|
| 2016ஜன1<br>1 | இருப்பு கீ / கொ<br>ரொக்க க/கு | | 2,000<br>4,000 | 2016 ஜன30<br>31 | ரொக்க க/கு<br>இருப்பு கீ /இ | | 400<br>5,600 |
| | | | 6,000 | | | | 6,000 |
| பிப்ரவரி<br>1 | இருப்பு கீ/கொ | | 5,600 | | | | |

www.Padasalai.Net